**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்.**

**முன்னிலை :– திரு.S.அன்புதாசன், பி,காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்.**

**2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ம் நாள் புதன்கிழமை**

**IA.No.4/2026 in IA.No.3/2026 in OS.No.44/2020**

1. சாவித்திரி
2. வசந்தி .... மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள்

/எதிர்/

ராணி .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படலாம் என மேற்குறிப்பு செய்யப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

<u>உ த் த ர வு</u>

கடந்த 01.07.2026ம் தேதியில் மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்தும், மனுதாரர்களது எதிருரையை ஏற்றுக்கொள்ள வேண்டி குவிமுச கட்டளை 9 விதி 7–ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–**

மனுதாரர் இம்மனுவில் 1ம் மனுதாரர் ஆவார், I.A.No.3/2026ல் 3, 4 எதிர்மனுதாரர்கள் ஆவார்கள். மனுதாரருக்கு வயோதிகம் காரணமாக

மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாலும், 1 ம் மனுதாரருடன், 2ம் மனுதாரர் உதவிக்கு வந்ததால் மேற்படி தேதியில் எதிருரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. தற்போது உடல்நிலை தேறி வழக்கறிஞரை சந்தித்த போது மேற்படி விபரம் தெரிய வந்தது. மனுதாரர்கள் வழக்கை தொடர்ந்து நடத்த தயாராக உள்ளார். எனவே, கடந்த 01.07.2026ம் தேதியில் மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்தும், மனுதாரர்களது எதிருரையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகளின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு வயோதிகம் காரணமாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாலும், 1 ம் மனுதாரருடன், 2ம் மனுதாரர் உதவிக்கு சென்றதால், மேற்படி தேதியில் எதிருரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாலும், எதிருரை தாக்கல் செய்ய காலதாமதம் ஆகிவிட்ட காரணத்தினாலும் தாவா மனு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள்/3,4 பிரதிவாதிகள் எதிருரையை தாக்கல் செய்துவிட்டதாலும், இவ்வழக்கின் இறுதியான தீர்வுக்கு தரப்பினர்களுக்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்திற்க்கொண்டு, மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 01.07.2026 அன்று

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்தும், மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொண்டும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படியாரின் மனுவை அனுமதிப்பது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2026 ம் நாளன்று ஆகஸ்ட் திங்கள் 5-ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.08.06 11:37:07 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்**

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை**

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.08.06 11:37:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்.**